**05.08.2024 அ.வ.எண்.117/2015 பி.வா.சா.2, மதியழகி க/பெ. உதயகுமார்**

**குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதும் வரவில்லை. பிரதிவாதி அழைத்ததால் வந்துள்ளேன். எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1976-ம் ஆண்டு எனக்கு திருமணம் நடந்தது. என் கணவர் எனது திருமணத்திற்கு முன்னர் என் உறவினர்தான். என் தந்தைக்கு நானும், இராஜகுமாரி மற்றும் 1-ம் வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர் பிள்ளைகள் ஆவோம். 1-ம் வாதி வாய் பேச இயலாதவர் என்பது சரிதான். அவர் விவசாய வேலைகள் அனைத்தையும் செய்வார் என்பது சரிதான். 1-ம் வாதி வாய் பேச இயலாதவர் என்பதால் குடும்பத்தை பிரதிவாதிதான் கவனித்துவந்தார் என்பது சரிதான். எனது தாய் தந்தையர் இருக்கும்போதே எனக்கு திருமணம் நடந்தது. 1-ம் வாதியுடன் பேச்சுவார்த்தையுடன்தான் உள்ளேன். இந்த வழக்கிற்கு பிறகு 1-ம் வாதி என்னுடன் பேச்சுவார்த்தையுடன் இல்லை என்பது சரிதான். 1-ம் வாதிக்கு திருமணம் நடந்தபோது என் தாயார் மட்டும் இருந்தார் தந்தை இறந்திருந்தார். எனது திருமணத்திற்கு முன்னர் குடும்ப சொத்து சுமார் 16 ஏக்கர் இருந்தது. குடும்ப சொத்துகளை 1-ம் வாதியும் பிரதிவாதியும் 2000-வது வருடம் அக்டோபர் மாத வாக்கில் பிரித்துக் கொண்டார்கள். அந்த பாகப்பிரிவினைக்கு நான் கையொப்பம் ஏதும் செய்யவில்லை. அந்த பாகப்பிரிவினை நான் முன்னின்றுதான் நடந்தது. அதில் நஞ்சையில் இருவருக்கும் தலா சுமார் 1 ஏக்கர் 30 செண்டும் புஞ்சையில் 1-ம் வாதிக்கு 4 ஏக்கரும் பிரதிவாதிக்கு 6 ஏக்கரும் பிரித்தார்கள். கிணறு மற்றும் பம்புசெட்டை 1-ம் வாதிக்கு ஒதுக்கினார்கள். மொத்தம் ஒரு கிணறுதான் இருந்தது. இரண்டு கிணறு இருந்தது என்பது சரியல்ல. பாகப்பிரிவினைபடி அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்களே பட்டா மாற்றிக்கொண்டு அனுபவிக்கின்றனர் என்பது சரிதான். 1-ம் வாதியின் அனுபவத்திற்கு பிரதிவாதி ஏன் இடையூறு செய்கிறார் என கேட்டால் பிரதிவாதி இடையூறு எதனையும் செய்யவேயில்லை. பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகார்கள் கொடுக்கப்பட்டது என்றால் அவை 1-ம் வாதியின் மனைவியால் பொய்யாக கொடுக்கப்பட்டவை ஆகும் அந்த புகாரின் பேரில் பிரதிவாதியை போலிசார் அடித்தும் உள்ளார்கள். அவர்கள்தான் இடையூறு செய்தார்கள். 6 மாதத்திற்கு முன்னர் கிணற்றுக்கான மின்கம்பத்தை பிரதிவாதி சேதப்படுத்தி சாய்த்துவிட்டார் என்றால் அப்படி ஏதும் பிரதிவாதி செய்யவில்லை. மின்கம்பம் தானாகவே விழுந்துவிட்டது அதனை 1-ம் வாதிதான் சரிசெய்தார் என்றால் அந்த சொத்தே அவருக்கு சொந்தமில்லை தேவையில்லாமல் அப்படி செலவு செய்துள்ளார். 2,3 இன சொத்துக்கள் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினையில் கிடைத்ததாக நான் சொல்வதில் அவற்றின் புல எண், விஸ்தீரனம் என்ன என கேட்டால் அது விவரம் ஞாபகமில்லை. 1-ம் வாதியுடன் நான் சுமூகமாக இல்லை என்ற காரணத்தால் அவருக்கு எதிராக பொய் சாட்சி சொல்கிறேன் என்பது சரியல்ல.